**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**
**TIRUVANNAMALAI.**
**MCOP No.272/2023 and 273/2023**

**01.04.2026 ம.சா.2 மதிவாணி க/பெ.குருபரன்**

**சத்திய பிரமாணத்தின் பேரில் 2,3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை. லட்சுமிபிரியா என்னுடைய தம்பியின் மனைவி. கிருத்திகா மற்றும் அர்விந்த என் தம்பின் பிள்ளைகள். விபத்தில் இறந்த திலகவதி என் தாயார். அவர் இறக்கும்போது செய்யாறில் தனியாகதான் இருந்தார். அவருக்கு எந்தவித வருமானமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அவர் என் தந்தையின் பென்ஷன் வாங்கிக்கொண்டிருந்தார். என் தாயார் கடைசியாக பெற்ற குடும்ப ஓய்வூதியம் எவ்வளவு என்பதை காண்பிக்க எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். எனக்கும் என்னுடைய சகோதரி சுதாவாணிக்கும் திருமணம் ஆகிவிட்டது. இருவரும் தனித்தனியாக அவரவர் குடும்பத்துடன் வசிக்கிறோம் என்றால் சரிதான். என்னுடைய சகோதரர் சரவணனும் தனியாக அவர் குடும்பத்துடன் வசித்து வந்தார் என்றால் சரிதான். நான் என் தாயாரின் வருமானத்தை நம்பி இருந்ததில்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் என் தம்பி ஓட்டிச்சென்ற வாகனம் என் தம்பியின் மனைவிக்கு சொந்தமானது. என் தம்பி வாகனத்தை சாலையின் வலது பக்கத்தில் இருந்து இடது பக்கமாக திடீரென திருப்பியதால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. என் தம்பி எந்த வித சைகையும் செய்யாமல் திடீரென திரும்பியதால்தான் பின்னால் வந்த வாகனத்தின் மீது மோதியது என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்திற்கு என் தம்பியின் கவனக்குறைவுதான் காரணம் என்றும் 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் மீது எந்த தவறும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. என் தம்பியும் என் தாயாரும் விபத்து சமயத்தில் தலைக்கவசம் அணியாமல் சென்றார்கள் என்றால் சரியல்ல. என் தம்பி போட்டுக்கொண்டிருந்தார். இருவரும் தலைக்கவசம் அணிந்திருந்தால் அவர்களுக்கு எந்த காயமும் ஏற்பட்டிருக்காது என்று சொன்னால் சரியல்ல. நான் இவ்வழக்கில் அதிக இழப்பீடு பெறுதற்காக பொய்யான தகவல் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over to the witness and acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.